# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடமாகாணம்

## பயிற்சிப் பரீட்சை - ஏப்ரல் 2018

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - I

**4**

45 நிமிடம்

சுட்டெண் ........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.


* உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே தருக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.




## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்


| பக்க இலக்கம் | பெற்ற சரியான வினாக்களின் எண்ணிக்கை |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| ☐ $\times 2\frac{1}{2} =$ ☐ புள்ளிகள் | |
| எழுத்தில் | |




| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ........................ பெயர் ........................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (........................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்து கின்றேன். | ........................ பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ........................ பெயர் ........................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

- **1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.**

*01.* 

1)   2)   3) 

*02.* 

1)   2)   3) 

- **3, 4 ஆகிய வினாக்களில் ஓர் உருத்தொகுதி ஏனைய உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருத்தொகுதியைத் தெரிவு செய்க.**


*03.*



1)



2)



3)


*04.*



1)



2)



3)

- **5, 6 ஆகிய வினாக்களில் தரப்பட்டவற்றுள் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் சேராதது எது எனத் தெரிவு செய்க.**

*05.* சதுரம், கனவுரு, சதுரமுகி, செவ்வகம், நான்முகி, பெட்டி

1) பெட்டி  2) நான்முகி  3) சதுரம்

*06.* சாகரம், நீர், பரவை, புள், கடல், பட்சி

1) புள்  2) நீர்  3) கடல்

- **தரப்பட்ட பாடலை வாசித்து சரியான விடையினைத் தெரிவு செய்க.**

**இரந்துண்டு வாழும் வாழ்வை**
**இன்றோடு விட்டொதுக்கி**
**கரமுண்டு கலப்பையுண்டு**
**கடிதெழு களைவிட்டு**

*07.* இப் பாடலில் விளக்குவது




1) உற்பத்தி செய்தல்  2) வியாபாரம் செய்தல்  3) விவசாயம் செய்தல்


சுட்டெண் :..................

08. இப் பாடலில் வரும் கரம் என்ற சொல்லின் ஒத்தபதம் யாது?

1) கை    2) ஏர்    3) கடிகாரம்

09. தளவாடியில் பார்க்கும் போது மாற்றமின்றி தெரியும் உரு யாது?

1)     2)     3) 

10.  இவ்வுருவில் காணப்படும் செவ்வகங்களின் எண்ணிக்கை

1) 11    2) 12    3) 13

11. கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு வடிவத்திற்கும் பெறுமதிகள், விலைகள் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றினை அவதானித்து கேட்கப்படும் வினாவுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

□ = **8**    ○ = **12** எனின்

△ + □ - ○ = **11** எனின் △ இன் பெறுமதி

1) 10    2) 15    3) 12


12. கரும்பு → இனிப்பு எனின் உப்பு →


1) கசப்பு    2) புளிப்பு    3) உவர்ப்பு

13. பின்வரும் இரு உருக்களையும் சேர்க்கும் போது கிடைக்கும் உரு எது?


    1)     2)     3) 

14. அருகில் உள்ள உருவை புள்ளிக்கோட்டின் வழியே நான்காக மடித்து அதில் நிழற்றிய பகுதியை வெட்டி நீக்கிய பின் கிடைக்கும் உரு




1)     2)     3) 

- **15, 16ம் வினாக்களிற்குப் பொருத்தமான எண்கோலத்தினை அவதானித்து சரியான இடைவெளியில் வரும் விடையைத் தெரிவு செய்க.**

15. 



1) 8    2) 3    3) 5

16. 


1) 8    2) 4    3) 3

17. ஒரு பெட்டியில் 19 மாம்பழங்கள் உண்டு. அவற்றில் இருந்து நீர் 11 மாம்பழங்களை எடுத்துக் கொண்டால் உம்மிடம் காணப்படும் மாம்பழங்களின் எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதினால்

1) xi  2) viii  3) x

18. 

பின்வரும் உருக்கோலத்தில் அருகருகே ஒரே நிறம் அமையாதவாறு நிறம் தீட்டப்பட வேண்டும். அவ்வாறு நிறம் தீட்டுவதற்குத் தேவையான நிறங்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை

1) 6  2) 3  3) 4

19. "வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்" என்ற கருத்தை ஏற்கும் பழமொழியாக இருக்கக் கூடியது

1) பசி வந்தால் பத்தும் பறக்கும்
2) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ


20. இன்னும் ஐந்தாண்டுகளில் இலங்கை சுதந்திர தினத்தை பவளவிழாவாகக் கொண்டாட இருக்கிறது எனினும் பொன்விழாவை எப்போது கொண்டாடியது

1) 1964  2) 2008  3) 1992

21. 21ம் நூற்றாண்டின் 7 ஆம் தசாப்தத்தில் உள்ள ஆண்டாக அமைவது

1) 1964  2) 2067  3) 2076

✧ **பின்வரும் உருவைக் கவனித்து 22, 23ம் வினாக்களிற்கு விடை தருக.**



22. நிழற்றிய பகுதியின் பரப்பளவை போல் முழு உரு எத்தனை மடங்கு?

1) 14 மடங்கு  2) 5 மடங்கு  3) 7 மடங்கு

23. நிழற்றிய பகுதியின் சுற்றளவைப் போல் முழு உரு எத்தனை மடங்கு?

1) 3 மடங்கு  2) 12 மடங்கு  3) 6 மடங்கு


24. தனது பாடநூல் ஒன்றினைப் பார்க்கும் போது அங்கு கமல் எனும் மாணவன் முறையே 18, 19, 24, 25, 69, 70 பக்கங்களினை காண முடியவில்லை. புத்தகத்தில் கிழிக்கப்பட்ட கடதாசித் தாள்கள் எத்தனை?

1) 4  2) 5  3) 6

25. ஒரு புத்தகத்திற்கு எப்போதும் இருப்பது

1) பாடங்கள்  2) படங்கள்  3) பக்கங்கள்

26. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியில் காணப்படும் எதிர்ப்பக்கங்களின் கூட்டுத்தொகை 4 , 12 , 20 ஆகும்.




வினாக்குறி இடத்தில் வரவேண்டிய எண் பெறுமதி?

1) 1     2) 7     3) 11

27. ஒரு பெட்டியில் உள்ள முட்டைகளில் 1 தடவையில் 5 முட்டைகள் எடுக்கும் சந்தர்ப்பத்தில் 2 முட்டைகள் பழுதடைந்து காணப்பட்டது. பெட்டியில் உள்ள முட்டைகளில் பழுதடைந்த முட்டைகள் 16 எனின் ஆரம்பத்தில் பெட்டியில் இருந்த முட்டைகள் எத்தனை?

1) 48     2) 40     3) 15


28. ஒரு வியாபாரியிடம் படித்தராசும், 3kg , 2kg , 5kg நிறையுடைய படிகள் மூன்று மட்டும் கொடுக்கப்பட்ட போது ஒரே தடவையில் 4kg அரிசியை அளந்து கொடுக்க

1) முடியும்     2) முடியாது     3) மேலும் படிகள் தேவை

29. குமாரின் வயது 4 ஆக இருக்கும் போது கமலின் வயது அவரின் வயதின் மூன்று மடங்காக காணப்பட்டது. இன்னும் எத்தனை ஆண்டுகளின் பின் குமாரின் வயதின் இருமடங்காகும்

1) 4 ஆண்டுகளில்     2) 6 ஆண்டுகளில்     3) 12 ஆண்டுகளில்

30.




இதில் 8 சதுரமுகிகள் அடுக்கப்பட்டு சுற்றி வர மை பூசப்பட்டு தனிக்கட்டைகளாகப்பட்ட போது, மை பூசப்படாத பக்கங்கள் எத்தனை?


1) 2     2) 24     3) 16


31. ஒரு தொட்டியில் காணப்படும் பூக்கள் ஒவ்வொருநாளும் இரட்டிப்பாகும் தன்மை கொண்டது. அத்தொட்டியில் 5 பூக்கள் முதலில் காணப்பட்டது. 20வது நாள் அத்தொட்டி முற்று முழுதாக நிரம்பிக் காணப்பட்டது. அத்தொட்டி பூக்களால் அரைவாசி நிரம்ப எடுத்துக்கொண்ட நாட்கள்

1) 19 நாட்கள்     2) 10 நாட்கள்     3) 4 நாட்கள்

- **கோட்டுப் படத்தினை அவதானித்து விடை தருக.**




32. பேனை ஒன்றின் விலை

1) ரூபா 12.00     2) ரூபா 20.00     3) ரூபா 63.00


33. புத்தகம் ஒன்றின் விலை

1) ரூபா 12.00     2) ரூபா 20.00     3) ரூபா 63.00

34. முச்சக்கர வண்டிகளும் கார்களுமாக 12 இருந்தன. அவற்றில் காணப்படும் சில்லுகளின் எண்ணிக்கை 39 எனின், அங்குள்ள கார்களின் எண்ணிக்கை

1) 3     2) 9     3) 8

- **தரம் 5 பிள்ளைகள் சிலரின் விருப்பமான விளையாட்டுக்களை உரு காட்டுகிறது.**




35. மூன்று விளையாட்டுக்களிலும் விருப்பமான பிள்ளை யார்?
 1) நிமல் 2) பாபு 3) சுமன்


36. கிரிக்கெற்றையும், வொலிபோலையும் விரும்புபவரும் காற்பந்தை விரும்பாதவருமான பிள்ளை
 1) அமல் 2) கமல் 3) விமல்

37. கமலி கடற்கரையோரமாக செல்லும் போது அவளது நிழலானது அவளது வலது கைப்பக்கமாக விழுந்தது எனின், அவள் செல்லும் திசையாக அமையாதது
 1) தெற்கு 2) வடக்கு 3) மேற்கு

38. சங்கரிடம் 50 ரூபாய், 20 ரூபாய், 10 ரூபாய் தாள் காசுகள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை 4 எனின், அவற்றின் பெறுமதி ரூபாய் 100 எனின், ரூபாய் 10 தாள் காசுகளின் எண்ணிக்கை
 1) 1 2) 2 3) 4

39. மாணவன் ஒருவன் ஓர் எண்ணில் இருந்து 70 ஐ கூட்டுவதற்கு பதிலாக தவறுதலாக 70 ஐ கழித்துவிட்டான். அப்போது பெறப்பட்ட விடை 140 எனின், உண்மையில மாணவன் பெற வேண்டிய விடை
 1) 210 2) 280 3) 70

✧ **சிவப்பு, நீலம், மஞ்சள், வெள்ளை, கறுப்பு என்னும் ஐந்து நிற கீற்றுக்களைக் கொண்ட கொடி உருவில் தரப்படுகிறது.**




- **மூலவர்ணங்கள் அருகருகே அமையப் பெறவில்லை**
- **வெள்ளையில் இருந்து 4வதாக மஞ்சள் கொடியும்**
- **சிவப்புக் கொடிக்கும் மஞ்சள் கொடிக்கும் இடையில் கறுப்பு கொடியும் உள்ளது.**
- **நான்காவதாக கறுப்பு கொடியுள்ளது ஆகவே**

40. கொடிக்கீற்றில் 1வது, 3வது கொடி நிறங்கள் முறையே
 1) நீலம், மஞ்சள் 2) நீலம் , சிவப்பு 3) சிவப்பு, கறுப்பு

(40 x $2\frac{1}{2}$ = 100 **புள்ளிகள்**)

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

**பயிற்சிப் பரீட்சை 04 இன் விடைகள்**

தரம் – 05 **4** வினாத்தாள் – I

| | | | |
|---|---|---|---|
| 1. | 2 | 21. | 2 |
| 2. | 3 | 22. | 3 |
| 3. | 3 | 23. | 1 |
| 4. | 2 | 24. | 2 |
| 5. | 1 | 25. | 3 |
| 6. | 2 | 26. | 3 |
| 7. | 3 | 27. | 2 |
| 8. | 1 | 28. | 1 |
| 9. | 2 | 29. | 1 |
| 10. | 2 | 30. | 2 |
| 11. | 2 | 31. | 1 |
| 12. | 3 | 32. | 2 |
| 13. | 2 | 33. | 3 |
| 14. | 1 | 34. | 1 |
| 15. | 2 | 35. | 3 |
| 16. | 1 | 36. | 3 |
| 17. | 1 | 37. | 3 |
| 18. | 2 | 38. | 1 |
| 19. | 3 | 39. | 2 |
| 20. | 1 | 40. | 2 |

The National e-learning Portal for The General Education